விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 259 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 19 வியாழக்கிழமை (04.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## புலமைப்பரிசில் பெறுபேறுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ள 16ஆம் பக்கம் பார்க்க

## 906 கிலோ கேரள கஞ்சா மன்னாரில் நேற்று மீட்பு



15ஆம் பக்கம் பார்க்க

### நாட்டில் இடம்பெற்ற பல கொலைகளுக்கு

## அரசியல் பின்புலங்கள் காணப்படுகின்றன - ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற பல கொலைகள் மற்றும் குற்றச் செயல்களில் அரசியல் பின்புலங்கள் காணப்படுகின்றன என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை பொலிஸ் துறையின் 159ஆவது ஆண்டு 15ஆம் பக்கம் பார்க்க



# செம்மணிப் புதைகுழிக்கு நீதி நிச்சயம் கிடைக்கும்

### அதை திசை திருப்ப ஜனாதிபதி வடக்குக்கு வரவில்லை
### கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர்

(முல்லைத்தீவு)

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி நிச்சயம் கிடைக்கும். அதை திசை திருப்ப ஜனாதிபதி வடக்குக்கு வரவில்லை என கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



## தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு இன்று இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் இரதோற்சவம் இன்றாகும்.

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் பிறந்து 5 நாட்களேயான குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழில் பிறந்து 5 நாட்களேயான ஆண் குழந்தை ஒன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு சஜித்துக்கு அழைப்பு



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமாகிய சஜித் பிரேமதாஸ கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய அவர் அழைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரச 16ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.கொடிகாமத்தில்

## புகையிரதம் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று புதன்கிழமை காலை 11.30 மணியளவில் இச்சம்பவம் 15ஆம் பக்கம் பார்க்க



### செம்மணி மனிதப் புதைகுழியில்

## இரு என்புக்கூட்டுக்கு மேலாக ஒரு என்புக்கூடு அடையாளம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் இரு என்புக்கூட்டுக்கு மேலாக ஒரு என்புக்கூடு ஒன்று அடையாளம் காணப் 15ஆம் பக்கம் பார்க்க

### மூளையில் இரத்தக் கசிவு

## யாழில் 7 வயது சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவு காரணமாக யாழில் 7 வயதுச் சிறுவன் ஒருவன் நேற்றுமரணமடைந்துள்ளான்.

இதில் சுன்னாகம் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 15ஆம் பக்கம் பார்க்க

## 9 எலும்புக்கூட்டுத் தொகுதி செம்மணியில் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் புதிதாக 9 மனித எச்சங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் 42ஆவது நாள் அகழ்வு நேற்று புதன்கிழமை யாழ்.மாவட்ட மேலதிக நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 9 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு ஏற்கெனவே அடையாளம் 15ஆம் பக்கம் பார்க்க

### நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 01.30 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் இந்திய இலங்கை கடற்போக்குவரத்திற்கு மேலதிகமாக இந்தியாவிலிருந்து கப்பல் மூலம்பொருட்களைக்கொண்டு வருதல் மற்றும் இங்கிருந்து என்ன பொருட்களை கொண்டு செல்லலாம் எனவும் அதன் மூலம் ஏற்படும் தொழில் வாய்ப்பு மற்றும் சாதக பாதகங்கள் ஆராயப்பட்டதுடன் காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி தேவைகளுக்கான காணித் தேவைப்பாடு தொடர்பாகவும் இவ்துறைமுக அபிவிருத்தியை ஏற்படுத்துவதனூடாக எவ்வாறான சிறப்பான சேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் அல்லது அதனால் ஏற்படும் பாதக விளைவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாகப் பிராந்திய இணைப்பை வலுப்படுத்துதல், வர்த்தகத்தை எளிதாக்குதல் மற்றும் வடக்கு மாகாணத்திற்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குதல், வேலைவாய்ப்புகள், சுற்றுலாத்துறை வளர்ச்சி, சுற்றுச்சூழல் தாக்கம், சமூக நடத்தையில் ஏற்படும் மாற்றம், அரச சேவைகள், போக்குவரத்து சேவைகள்போன்றவற்றின் அபிவிருத்திசார் விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் இலங்கை துறைமுக அதிகார சபை உதவி முகாமைத்துவ பணிப்பாளர் ஜெ.ஏ.சந்திரரத்ன, பிரதம பொறியியலாளர் சி.எல்.தசநாயக்க, திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.கெட்டியாராய்ச்சி, பிரதம பொறியியலாளர் எஸ்.எச்.எம்.பி. அபயசேகர, நிகழ்சித்திட்ட முகாமையாளர் தேவசுரேந்திரா, பிரதம பொறியியலாளர் கே.ஆர். என்.என்.எம் காரியவசம், யாழ்ப்பாண மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந் நிரநாதன், உதவி மாவட்ட செயலாளர் உ. தர்சினி மற்றும் துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

(ம-7)

# புதிதாக 18 மேல் நீதிமன்ற

## நீதிபதிகள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்



(கொழும்பு)

பதவிஉயர்வு பெற்ற புதிய 18 மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான நியமனக் கடிதங்களை நேற்று (03) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வழங்கினார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 111 ஆவது உறுப்புரிமையின் (2) ஆவது உப பிரிவின்படி ஜனாதிபதியினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இவர்களுள் செம்மணி வழக்கு உள்ளிட்ட முக்கிய வழக்குகளில் திறம்பட செயற்பட்ட யாழ்ப்பாண நீதமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசாவும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளாக எஸ்.எஸ்.கே. விதான, ஏ.எம்.ஐ.எஸ். அத்தநாயக்க, ஏ.எம்.எம்.ரியால், டீ.பீ.முதுங்கொடுவ, எஸ்.பி. எச்.எம்.எஸ்.ஹேரத், ஜே.கஜனி தீபாலன், டி.எம்.டி. சி.பண்டார, எச்.எம்.பி.ஆர். விஜேரத்ன, டி.எம்.ஏ.செனவி ரத்ன, ஏ.ஏ. ஆனந்தராஜா, ஜி.என். பெரேரா, ஏ.ஜூடேசன்ஷ, திருமதி டபிள்யூ.கே.டி.எஸ். வீரதுங்க, ஆர்.பி.எம்.டி.ஆர். வெலி கொடபிடிய, கே.டி. என்.வி. லங்காபுர, டி.எம். ஆர்.டி.திஸாநாயக்க, எம்.ஐ. எம்.ரிஸ்வி, ஏ.ஜெயலக்ஷி டி சில்வா ஆகியோர்பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

(ம-7)


## கேள்வி அறிவித்தல்

### நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

### சபை நிதி - 2025

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விக்கான விலைமனுக்கள் கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருட்கள் கொள்வனவிற்காக கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில். (தொலைபேசி இலக்கங்கள் - 021-222-2700, பக்ஸ் இல 021-222-0138 e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2025.09.04 ம் திகதியிலிருந்து 2025.09.17 ம் திகதி வரை மேற்கூறிய அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் அலுவலகத்தில் 04.09.2025ஆம் திகதியிலிருந்து 17.09.2025ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- (வரி நீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு 18.09.2025ஆம் திகதி மு.ப11.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று) நாட்கள் (20.11.2025) வரையும் செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி முன்னாயத்த கூட்டம் 10.09.2025(புதன் கிழமை) மு.ப 11.00 மணிக்கு சபையின் கலந்துரையாடல் மண்டபத்தில் இடம்பெறும்.


| ஒப்பந்த இலக்கம் | பொருட்களின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn(Vat நீங்கலாக) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(10) /Street Light/2025 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் | 3. 5 | வடக்கு மாகாண சபை / மாவட்ட செயலகம் / நல்லூர் பிரதேச சபையில் வழங்குனராக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் | 60,000.00 | 18.12.2025 |

தலைவர்,
உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்

(C-3801) 04.09.2025


# மரண அறிவித்தல்

பிறப்பு 12 - 03 - 1936



இறப்பு 03 - 09 - 2025

## கந்தையா பாலகிருஷ்ணன்

அல்வாய் வடக்கு, இலட்சிங்கன் ஒல்லை வெட்டையைப் பிறப்பிடமாகவும் கிருஷ்ணபதி அல்வாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலகிருஷ்ணன் (03.09.2025) நேற்று புதன்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இலட்சுமி தம்பதியரின் இளைய மகனும், கதிர்காமு - தெய்வானை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற திலகவதி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மெய்யழகன் - சபிதா அவர்களின் அன்புத் தந்தையும், இங்கிதை (Associate Software Engineer - கொழும்பு WIS Groups) பேரனும் மா.மெய்யழகன் (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லம்மா, செல்லையா - தங்கம்மா, சின்னத்தம்பி - பொன்னம்மா, கதிரவேல் (பவளம்) குலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், புத்திசிகாமணி, பகவதி, இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.09.2025) இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் 11.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருஷ்ணபதி,
அல்வாய் வடக்கு.

தகவல் : குடும்பத்தினர்
மா.மெய்யழகன் (அதிபர்)

(C-3805)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை விட்டுக்கொடுக்க முடியாது!

# ஜனாதிபதியின் கருத்துக்கு எதிராக

# கொந்தளிக்கும் இந்திய அரசியல் கட்சிகள்

(புதுடில்லி)

**கச்சதீவு குறித்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்த கருத்துக்கு இந்திய அரசியல் கட்சிகள் கண்டனம் வெளியிட்டுள்ளன.**

அதன்படி, கச்சதீவு குறித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்த கருத்து, இரு நாட்டு உறவுக்கு விரோதமானது எனவும் இந்த விடயத்தில் மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கச்சதீவுக்கு விஜயம் மேற்கொண்டு, அங்கு கடற்படை அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தியுள்ளார். இதைத் தொடர்ந்து கச்சதீவு இலங்கைக்கு உரியது, அதை யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது எனக் கூறியுள்ளார்.

அநுரகுமார திசாநாயக்கவின் இந்தப் பேச்சு இந்தியா-இலங்கை நல்லுறவுக்கு வலு சேர்க்காது. இந்தியாவை, குறிப்பாக தமிழ்நாட்டு மக்களை ஆத்திரமூட்டும் செயலாக அவரது பேச்சு அமைந்துள்ளது.

கச்சதீவு மற்றும் தமிழக கடற்றொழிலாளர்கள் குறித்த அவரது அணுகுமுறை தமிழக கடற்றொழிலாளர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பையும், பதற்றத்தையும் உருவாக்கியுள்ளது என்பதை மத்திய அரசின் வெளியுறவு அமைச்சு கருத்திற் கொள்ள வேண்டும்.

தமிழக கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், கச்சதீவு மீட்கப்பட்ட இந்தியாவின் கடல் பரப்பியல் எல்லை உரிமையை நிலைநாட்டவும் மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் தி.வேல்முருகனும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

"கச்சதீவு விவகாரத்தில் இலங்கை ஜனாதிபதியின் திமிர்ப்பேச்சு தமிழக கடற்றொழிலாளர்களின் உரிமைக்கும், மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் நேரடியாகச் சவால் விடும் அகந்தை மிகுந்தப் பேச்சாகும். கச்சத்தீவு தமிழர்களின் உரிமை நிலம். இலங்கை ஜனாதிபதியின் பேச்சுக்கு மத்திய அரசும், அமைச்சர்களும் மௌனம் சாதிப்பது வரலாற்றின் பெரும் துரோகம்.

எனவே, கச்சதீவை மீட்டெடுக்க சட்ட, அரசியல் நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் உடனடியாக தொடங்க வேண்டும். இல்லாவிட்டால் மக்களைத் திரட்டி போராட்டங்கள் நடத்துவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)



## 554 சிறை அதிகாரிகளை நியமிக்க அனுமதி

(கொழும்பு)

சிறைச்சாலை திணைக்களத்தில் நிலவும் ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 554 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்ய அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

சிறைச்சாலை ஆணையாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் ஜகத் வீரசிங்க இது குறித்து தெரிவிக்கையில்,

இந்த வெற்றிடங்கள் குறித்து ஒகஸ்ட் 29, 2025 அன்று அரச வர்த்தமானியில் அதிகாரபூர்வமாக அறிவிப்பு வெளியிடப்பட்டது.

புதிய ஆட்சேர்ப்பில் 409 ஆண் சிறைக்காவலர்கள், 70 பெண் சிறைக்காவலர்கள், இரண்டாம் தர ஆண் சிறைச்சாலை அதிகாரிகளாக 55 பேர், இரண்டாம் தர பெண் சிறைச்சாலை அதிகாரிகளாக 7 பேர், இரண்டாம் தர ஆண் புனர்வாழ்வு அதிகாரிகளாக 10 பேர் மற்றும் இரண்டாம் தர பெண் புனர்வாழ்வு அதிகாரிகளாக 3 பேர் உள்வாங்கப்படவுள்ளனர். (நி)

## முன்னாள் பொலிஸ் மா அதிபர் விடுதலை

(கொழும்பு)



பொலிஸ் தலைமையகத்தின் மின்தூக்கி(லிப்ட்) பராமரிப்பாளர் ஒருவரை அச்சுறுத்தியமை தொடர்பான குற்றச்சாட்டிலிருந்து முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி)

## மனித உரிமைகள் உள்ளிட்ட விவகாரங்களில் இலங்கையின் முன்னேற்றத்தை அங்கீகரியுங்கள்

### சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளிடம் வெளிவிவகார அமைச்சர் வேண்டுகோள்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் அமைந்துள்ள வெளிவிவகார அமைச்சில் வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்த அமைச்சர் விஜித ஹேரத், நாட்டின் சமகால நிலவரங்கள் மற்றும் குறிப்பாக மனித உரிமைகள் சார் நகர்வுகள் தொடர்பில் விரிவாக விளக்கமளித்தார்.

இதன்போது இலங்கையினால் இதுவரை அடையப்பட்டிருக்கும் முன்னேற்றங்களை அங்கீகரிக்குமாறும், ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபடுமாறும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடம் அமைச்சர் விஜித ஹேரத் கேட்டுக்கொண்டார்.

அதேபோன்று மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதை முன்னிறுத்தி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், பயங்கரவாதத்தடைச்சட்ட நீக்கம் மற்றும் புதிய சட்ட உருவாக்கம் உள்ளடங்கலாக எதிர்வருங்காலங்களில் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அவர் இராஜதந்திரிகளுக்குத் தெளிவுபடுத்தினார். (நி)

## எட்டு மாதங்களில் 36,708 பேருக்கு டெங்கு

### சுகாதாரத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

கடந்த எட்டு மாதங்களில் மட்டும் நாட்டில் முப்பத்தாறாயிரத்து எழுநூற்று எட்டு (36,708) டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் மட்டும் 2749 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன் இவ் வருடத்தில் இதுவரை 19 டெங்கு நோயாளர்கள் உயிரிழந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு மற்றும் சிக்கன் குனியா இரண்டும் தற்போது அதிகம் பரவி வருவதால் யாருக்கேனும் காய்ச்சல் இருந்தால் அவர்கள் பெரசிடமோல் மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

ஒருவருக்கு காய்ச்சல் இருப்பின் அவர் டெங்கு வைரஸினால் பாதிக்கப்பட்டிருந்தால் பிற வலி நிவாரணிகளை உட்கொள்வது உட்புற இரத்தப் போக்குக்கு வழிவகுக்கும்.

எனவே பொதுமக்கள் இது குறித்து விழிப்புடன் இருக்குமாறும் மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறும்படி சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது. (நி)

## தேசிய காப்பீட்டு தினம்

(யாழ்ப்பாணம்)

செப்ரெம்பர் முதலாம் திகதி தேசிய காப்பீட்டு தினமாகவும் அந்த மாதம் முழுவதும் காப்பீட்டு விழிப்புணர்வு தினமாகவும் கொண்டாடப்படுகின்றது.

அதன்படி இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் இந்த திங்கட்கிழமை "மீள்தன்மை கொண்ட மற்றும் வலுவூட்டப்பட்ட காப்பீட்டு எதிர்காலத்தை நோக்கி அடியெடுத்து வைப்போம்" எனும் தொனிப்பொருளில் அறிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஸ்ரீலங்கா கிரிக்கெட் தகுதிகாண் சுற்றுப்போட்டியில் ஜொனியன்ஸ் அணியை வீழ்த்திய கிறாஸ்கொப்பர்ஸ் அணி

**ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III இற்கான இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதிய இவ் இறுதிப்போட்டியில் 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் பிரிவு II இற்கு தகுதி பெற்றுள்ளது.**









கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இவ் இறுதிப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிறாஸ்கொப்பர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 36.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

ஜொனியன்ஸ் அணி சார்பில் அதிகபட்சமாக கிஷாந்துஜன் 31 ஓட்டங்களையும் ரட்ணம் 25 ஓட்டங்களையும் சச்சின் 17 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். கிறாஸ் கொப்பர்ஸ் அணி சார்பில் யோவல் றொஷான் 3 விக்கெட்டுக்களையும் அஜித், துளசிகன், சுஜீபன் மற்றும் றசீகரன் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

116 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 29.2 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்று பிரிவு II இற்கு தகுதி பெற்றுக் கொண்டனர்.

கிறாஸ்கொப்பர்ஸ் அணி சார்பில் அதிகபட்சமாக மதுஸன்-33 ஓட்டங்களையும் சர்மிலன் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும், கோகிலன் 15 ஓட்டங்களையும், வரலக்ஸன் 14 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் யாழ்.ஜொனியன்ஸ் அணி சார்பில் சன்சஜன் 2 விக்கெட்டுக்களையும் அகிலன் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றியிருந்தை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதினை கிறாஸ் கொப்பர்ஸ் அணியைச் சேர்ந்த வீரர் ஆர்.மதுஷானன் பெற்றுக்கொண்டிருந்தார். அதேவேளை சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதினையும் கிறாஸ்கொப்பர்ஸ் அணியைச் சேர்ந்த வீரர் ஜோவல் றொஷான் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.(3)



கொழும்பில் அண்மையில் நடைபெற்ற தேசியமட்ட கைப்பந்துப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட, கிளி/அக்கராயன் மகாவித்தியாலய 19 வயது ஆண்கள் அணியினருக்கு, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் நேரில்சென்று வாழ்த்துத் தெரிவித்திருந்தார். (படம்: கஜிந்தன்)

## முதல் ஒருநாள் போட்டி

## இங்கிலாந்து அணியை வீழ்த்தி தென்னாபிரிக்கா அபார வெற்றி



இங்கிலாந்து மற்றும் தென் ஆபிரிக்க அணிகள் இடையிலான முதல் ஒருநாள் போட்டி லீட்சில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற தென் ஆபிரிக்கா பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி 24.3 ஓவரில் 131 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக ஜேமி ஸ்மித் பொறுப்புடன் ஆடி அரைசதம் கடந்து 54 ஓட்டங்கள் எடுத்தார்.

தென் ஆபிரிக்கா சார்பில் கேசவ் மகராஜ் 4 விக்கெட்டும். வியான் முல்டர் மூன்று விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 132 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென் ஆபிரிக்கா அணி களமிறங்கியது.

மார்கிரம், ரிக்கல்டன் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர். மார்க்கிரம் அதிரடியாக ஆடி 55 பந்துகளில் 86 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

முதல் விக்கெட்டுக்கு மார்கிரம்-ரிக்கல்டன் ஜோடி 121 ஓட்டங்கள் சேர்த்து அசத்தியது.

இறுதியில், தென் ஆபிரிக்கா அணி 20.5 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 137 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் ஒருநாள் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஐஸ் போதைப்பொருள் தொழிற்சாலை நுவரெலியாவில் தீவிர விசாரணை

(கொழும்பு)

நுவரெலியாவில் கிரிஸ்டல் மெத்தம்பேட்டமைன் (ஐஸ்) போதைப்பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

'கெஹெல்பத்தர பத்மே' எனப்படும் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த நபர் இந்தத் தொழிற்சாலையில்04 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை முதலீடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், குறித்த தொழிற்சாலையை இயக்குவதற்காக நுவரெலியாவில் ஒரு வீடு வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக 2000 கிலோவுக்கும் அதிகமான இரசாயனங்கள் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்த பாதாள உலக நபர்கள் போலி கடவுச்சீட்டுகளை பெறுவதற்காக அரசியல் தொடர்புகள், பொலிஸ் அதிகாரிகளுடனான தொடர்புகள் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளுடனான தொடர்புகள் பற்றிய தகவல்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. இந்த விபரங்களை உறுதிப்படுத்த மேலும் ஆழமான விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)


# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் ஆத்திசூடி அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய விசுவாவசு வருட அலங்கார உற்சவம் கடந்த மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று புதன்கிழமையுடன் நிறைவடைந்தது.

அலங்கார உற்சவத்தை தொடர்ந்து இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று மதியம் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு திருவூஞ்சலும் பஞ்சமுக அர்ச்சனையும் இடம்பெற்று பஞ்சமுக விநாயகர் அலங்காரத்தேரில் தெருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3)

## கண்ணீர் அஞ்சலி



எமது குடும்ப நண்பரும், சிங்கம்ஸ் பார்மஸி உரிமையாளரும், விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் வரதலஷ்மி அவர்களின் கணவரும் ஆகிய

அமரர்.

**பொன்னுத்துரை சோமசூரியசிங்கம்**


அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புலோலி தெற்கு,
புலோலி.

கலாபூஷணம்
ப. பரராஜசிங்கம் (பப்பா) குடும்பத்தினர்

(c-3798)

## கண்ணீர் அஞ்சலி



யாழ் மாவட்ட விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கத்தின் தலைவர் வரதலஷ்மி சோமசூரியசிங்கம் அவர்களின் பாசமிகு கணவர்

அமரர்.

**பொன்னுத்துரை சோமசூரியசிங்கம்**

(உரிமையாளர், சிங்கம்ஸ் பார்மஸி)

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைக் கூறுவதோடு ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-3799)

யாழ் மாவட்டம்
விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கத்தினர்

# INVITATION FOR BID 2025/09

# PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA

1. The **Chairman, Local Authority Procurement Committee and Divisional Procurement Committee** on behalf of the **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.

2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

3. To be eligible for works contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of **building construction** for grade mentioned in the table below.

4. To be eligible for goods contract award the successful bidder shall not have been Blacklisted by any other acceptable Institution.

5. Bidders shall be a Sri Lankan citizen or private entity who may have a valid business Registration / company registration and valid registration certificate issued by respective Authority for the supply of respective Items. Bidder should have in the relevant field in Sri Lanka as required in the bidding documents

6. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.

7. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **From 04.09.2025 until 16.09.2025** |
| **Pre-Bid Conference** | **At 10.30 A.M on 11.09.2025** |
| **Closing and Opening of Bids** | **At 10.30 A.M on 17.09.2025** |

| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security: Amount (Rs.) | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | PSDG/NP/MU/PTKPS/2025/CWS/05 | Construction of Vehicle Shed for Water Bowser at Head Office - Puthukkudiyiruppu PS | PSDG | 3.39 | 84 | C9 or Above (Building) | 2,000.00 | 04-Nov-2025 | 50,000.00 | 02-Dec-2025 |
| **S/No** | **Bid ID** | **Description of Work** | **Source of Fund** | **Estimated Cost (Rs.) In Million (with VAT)** | **Contract/ Supply Period (Days)** | | **Non-Refundable Fee (Rs.)** | **Bid Validity Period upto** | **Bid Security Amount (Rs.)** | **Bid Security Validity** |
| 02 | NP/14/44(04)/Acc/Purchasing/Street Light/2025 | Purchasing of Street Light | Council | 1.60 | 45 | | 1,000.00 | 04-Nov-2025 | 20,000.00 | 02-Dec-2025 |
| 03 | NP/14/44(04)/Acc/Purchasing/Bike/2025 | Purchasing of Motor Bike | Council | 1.50 | 45 | | 1,000.00 | 04-Nov-2025 | 20,000.00 | 02-Dec-2025 |

8. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu (T.P:021 229 1024, email: pkips@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.

9. Bids (Original & Duplicate) for S/No 1 must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu and Bids (Original & Duplicate) for S/No 2-3 must be delivered to the Chairman, Local authority Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu on or before 10.30 A.M as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.**

10. Pre-Bid Conference will be held at Conference Hall, **Puthukkudiyiruppu Pradeshiya Sabha,Paranthan Road, Puthukkudiyiruppu** commencing at 10.30 AM as stated in table above.


11. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Local Authority Procurement Committee & Divisional Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.**

**04.09.2025**

(C-3800)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னாலை வரதராஜப்பெருமானின் 5ஆம் நாள் சப்பரத் திருவிழாவின்போது பொன்னாலை சந்திர பரத கலாலய மாணவர்களால் நாட்டியாஞ்சலி நிகழ்த்தப்பட்டபோது...

# தெருவிளக்குகளை முறையாகப் பயன்படுத்துங்கள் நகரசபைத் தவிசாளர் ஸ்ரீபிரகாஷ்

(சாவகச்சேரி)

தெரு விளக்குகளை முறையாகப் பயன்படுத்தி அவற்றின் ஆயுட்காலத்தை அதிகரிக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் ஸ்ரீ பிரகாஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11வட்டாரங்களிலும் பழுதடைந்த தெரு விளக்குகள் நகரசபையால் மாற்றியமைக்கப்படுகின்றன.

பெருமளவான நிதி செலவழித்தே திருத்தப் பணிகள் இடம்பெறுகின்றன. எனவே ஒவ்வொரு வட்டார மக்களும் தெரு விளக்குகளை முறையாக பயன்படுத்த வேண்டும்.

பகல் வேளையிலும் அணைக்கப்படாமல் ஒளிரும் தெரு விளக்குகள் விரைவில் பழுதடைந்து விடுகின்றன.

அதனை கண்காணித்து பராமரிக்க வேண்டிய பொறுப்பு பொதுமக்களிடம் உள்ளது.

அத்துடன் பொது இடங்களில் வெற்றிலை துப்புதல், கழிவுகளை இடுதல் உள்ளிட்ட செயற்பாடுகளையும் பொது மக்கள் தவிர்க்க வேண்டும் என மேலும் அவர் கேட்டுக் கொண்டார். (8-30)

# அமரர் வி.தர்மலிங்கத்தின் 40 ஆவது ஆண்டு நினைவுதினம்



(யாழ்ப்பாணம்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 40 ஆம் ஆண்டு நினைவுதினம் யாழ்ப்பாணம் தாவடியில் உள்ள அவரது நினைவுத் தூபியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற தபால் அதிபர் முருகேசு சண்முகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன், 'தமிழுணர்வும் ஈழத்தமிழர் கல்வி உரிமையும்' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

குறித்த நிகழ்வில், வி.தர்மலிங்கத்தின் மகனும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சி சபை தவிசாளர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-33-104)

# பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சி போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் எஸ்.திரிகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகண விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் எம்.பற்றிக்டிறஞ்சன், சிறப்பு விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)



Shina Srilanka வின் தொடர் நிகழ்வான சுற்றுலாவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக 30 மாற்றுத்திறனாளிகள் லக்ஷ்மி நாராயணன் கோவில், கண்ணியா வெந்நீர் ஊற்று, மாவட்ட செயலகம் திருகோணமலை, திருகோணமலை சிமெந்து உற்பத்தி நிலையம், துறைமுகம், கடற்கரை, அருங்காட்சியகம்,காளிகோயில், திருக்கோணேச்சரம், படகு சவாரி, கடற்கரை ஒன்று கூடல், கந்தளாய் குளம், சிகிரியா போன்ற இடங்களை பார்வையிட்டனர்.

# கம்பன் கழகம் நடத்தும் ஆடல் வேள்வி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் ஆடல் வேள்வி நிகழ்வு எதிர்வரும் 5 ஆம், 6ஆம் மற்றும் 7 ஆம் திகதிகளில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கலைச்சுடர் ஸ்ரீமதி ஸ்ரீதேவி கண்ணதாசனால் பயிற்றுவிக்கப்பட்ட பொன்னாலை சந்திர பரத கலாலய மாணவர்கள் வழங்கும் "கம்பனில் அறம்" எனும் பரத நாட்டிய நிகழ்வும் அதனைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு நாட்டியக் கலை மணி ஸ்ரீமதி பவானி குகப்பிரியாவினால் பயிற்றுவிக்கப்பட்ட தியாகராஜர் கலைக் கோயில் மாணவர்கள் வழங்கும் "தமிழ் தந்த கம்பன்" என்ற நாட்டிய நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆடல் வேள்வி நிகழ்வில் கலாசூரி ஸ்ரீமதி அபிராமி பற்குணம் நெறிப்படுத்தலை உத்பவா நடனப்பள்ளி மாணவர்கள் வழங்கும் "ரவி வர்மா ஓவியங்கள்" எனும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு கலைமாமணி ஸ்ரீமதி சிவானந்தினி ஹரிதர்ஷன் நெறிப்படுத்தலில் நிர்த்தனா நடனப்பள்ளி மாணவர் வழங்கும் "ரச மஞ்சரி" என்ற நிகழ்வும் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நர்த்தன கலைமணி ஸ்ரீமதி லக்ஷ்மி ஸ்ரீஹரனின் நெறிப்படுத்தலில் நுண்கலைக் கோயில் மாண வர்கள் வழங்கும் "கம்பனின் காவிய நாயகன்" நிகழ்வும் அதனைத் தொடர்ந்து ஆச்சார்ய கலா சாகர ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நெறிப்படுத்தலில் நாட்டிய கலாமந்திர மாணவர் வழங்கும் "காதம்பரி" என்ற நிகழ்வும் நடைபெறவுள்ளன. (3)

# ஊர்காவற்றுறை பிரதேச செயலர் கடமைகளைப் பொறுப்பேற்பு



(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட திருமதி வனஜா செல்வரெட்ணம் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் பிரதீபன் முன்னிலையில் கடமையேற்றார்.

இதன் போது மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா.ஜெயகரன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தி ஆகியோர் உடனிருந்தார்கள்.

மேலும் அன்றைய தினமே ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் தமது கடமையினைப் பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (8-33)

# யாழில் வள்ளிக்கும்மி ஆற்றுகை நிகழ்வு

(சாவகச்சேரி)

உலக சிவனடியார்கள் திருக்கூட்டத்தினரின் ஈழத்திற்கான பயணத்தின் ஓர் அங்கமாக தமிழ் மங்கை வள்ளிக் கும்மி ஆட்ட அரங்கேற்ற நிகழ்வு நல்லூர் சிவகுரு ஆதீன வளாகத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. தமிழகத்தில் இருந்து வருகை தரும் 65 கலைஞர்கள் குறித்த ஆற்றுகை நிகழ்வில் பங்கெடுக்கவுள்ளனர்.

வள்ளிக்கும்மி என்பது முருகப்பெருமான் மற்றும் வள்ளி ஆகியோரின் வாழ்க்கையை, குறிப்பாக வள்ளியின் பிறப்பு முதல் திருமணம் வரையிலான காலகட்டத்தில் பாடி, கும்மியடித்து ஆடும் ஒரு நாட்டுப்புறக் கலை ஆகும். தமிழகத்தின் கொங்கு மண்டலத்தில் தனிச்சிறப்பாக இக் கும்மி ஆட்டம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(3-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி விவகாரம்

## பொறுப்புக்கூறலை உறுதி செய்யுமாறு

## மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்து

(கொழும்பு)

**யாழ்ப்பாணம், செம்மணி மனித புதைகுழி தொடர்பான விசாரணையில் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கு வலுவான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.**

சாட்சிகள் மற்றும் ஊடகங்களை அச்சுறுத்துவதைத் தவிர்க்குமாறு பொலிஸாருக்கும், விசாரணையில் தலையிடுவதைத் தவிர்க்குமாறு இலங்கை இராணுவத்திற்கும் அது அழைப்பு விடுத்தது.

சில நிறுவன நிறுவனங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதியை உறுதி செய்வதற்காக முறையான இடைவெளிகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று ஆணையம் வலியுறுத்தியது.

இந்த விசாரணையில் 200இற்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

90 சதவீதத்திற்கும் அதிகமான உடல் பாகங்கள் ஆடைகள் இல்லாமல் கண்டெடுக்கப் பட்டு ஆழமற்ற குழிகளில் புதைக்கப்பட்டதாக ஆணையம் குறிப்பிட்டது.

இது நீதிக்குப் புறம்பான கொலைகள் என்ற சந்தேகத்தை எழுப்புவதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணையம் சுட்டிக் காட்டியுள்ளது. (நி)

## காற்றாலை, கனியமணல் திட்டங்களை மன்னார் தீவில் இருந்து வெளியேற்றுங்கள்!



(மன்னார்)

மன்னாரில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டத்திற்கும்,மக்களின் கோரிக்கைகளுக்கும் ஜனாதிபதி தலை சாய்த்து நடை முறைப் படுத்தி வருகின்ற காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகிய இரு திட்டங்களையும் வெகு விரைவில் மன்னார் தீவில் இருந்து வெளியில் கொண்டு சென்று மக்களின் வாழ்விடங்கள் பாதுகாக்க வேண்டும் என மன்னார் மக்கள் சார்பாக கோரிக்கை விடுப்பதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தி யோகு மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சுழற்சி முறையிலான போராட்டம் நேற்று புதன் கிழமை 32 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களினுடைய வாழ்விடங்களை பாதுகாக்கும் முகமாக நாங்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் போராட்டம் 32 ஆவது நாளாக தொடர்கின்றது.

ஜனாதிபதி வழங்கிய ஒரு மாத கால அவகாசத்தில் 19 நாட்கள் முடிவடைகிறது.அரச தரப்பில் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து முயற்சிகளும்,தமது காரியங்களை மிகவும் சாதுரியமாக நிறைவேற்றுவதற்காக இந்த முயற்சி மிகவும் தாமதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த செயற்பாடுகள் எமக்கு கவலையை தருகின்றது.மன்னார் மாவட்டச் செயலகம் மும்முரமாக இந்த பணியில் இறங்கி மக்களின் வேண்டுகோளையும்,மக்களின் வேதனைகளையும் அரசுக்கு தெரிவிக்க வேண்டும். எங்களுடைய உரிமைகளை நாங்கள் முழுமையாக அனுபவித்து வாழ்வதற்கான ஒரு சூழலை ஏற்படுத்தி எமது மண் பறி போவதை தடுத்து நிறுத்துவதை உறுதி செய்ய வேண்டும். ஏற்கனவே மன்னார் தீவில் அமைக்கப்பட்ட 30 காற்றாலை கோபுரங்களினால் ஏற்பட்ட பாதிப்புக்களும் உடனடி யாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும். மக்களுக்கு உகந்த செயற்பாடுகளை முன்னெடுத்து மக்களின் வாழ்வாதாரத்தையும், வாழ்வியலையும் பாதிக்கின்ற செயற்பாடுகள் முற்று முழுதாக நிறுத்தப்பட வேண்டும் என அரசிடம் கோரிக்கை விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (8-285)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்: ரோகிணி
கி-பா-70 1/4
உயரம் : 6"
தகைமை/தொழில்: BSc, Executive officer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15635

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:சதயம்
உயரம் :5'5"
தகைமை/தொழில்-A/L ,கடை
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/15636

பிறப்பு:1989- இந்து
நட்சத்திரம்: புனாபூசம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L.சாரதி
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/15920

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்:பூசம்
கி-பா-14 1/2
உயரம்: 5'9"
தகைமை/தொழில்-A/L, Supervisor
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/15640

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி-பா- 74 7 இல் சூரிசெவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில் - IT,IT Officer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15643

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1994- இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
10 இல் சூரிசெவ்
உயரம் : 5'
தகைமை/தொழில்: Optical Staff(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15204

பிறப்பு-1989-RC
நட்சத்திரம்-மிருகசீரிடம்
கி-பா-65
உயரம் : 5'
தகைமை/தொழில்: A/L ,Cleark
எதிர்பார்ப்பு: வெளிநாடு. அரச உத்தியோகம்
தொ.இ: G/15679

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-அச்சுவினி
7இல் செவ்
கி.பா -18 ½
உயரம் -5'4"
தகைமை/தொழில்: BSc,MSc,(Aus)
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/15680

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
உயரம் : 5'5"
தகைமை/தொழில் -MBBS(final year)
எதிர்பார்ப்பு: Doctor,Engineer
தொ.இ: G/15682

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்:பூரம் 7இல் செவ்
உயரம் : 5'4"
தகைமை/தொழில்-
BSc, Accountant(London)
எதிர்பார்ப்பு : தகுதியான ஆண்
தொ.இ: G/15686

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# வட இலங்கைச் சங்கீத சபை

## வருடாந்த பொதுக்கூட்டம் 2025

வட இலங்கைச் சங்கீத சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் 07.09.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு சபையின் தலைவர் (யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்) திருமதி மாலதி முகுந்தன் தலைமையில் வட இலங்கைச் சங்கீத சபை மண்டபத்தில் நடைபெறும்.

வருடாந்த பொதுக்கூட்டம் தொடர்பான அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ள சகல ஆயுட்கால உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**திருமதி. மாலதி முகுந்தன்**
**தலைவர்**
**வட இலங்கைச் சங்கீத சபை**
**(யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்)**

**உதவிச் செயலாளர்**
**வட இலங்கைச் சங்கீத சபை**

3797


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ரஷ்ய – உக்ரைன் போர்!

# முடிவுக்கு கொண்டு வருமாறு இந்தியப் பிரதமர் வலியுறுத்து

**(பீஜிங்)** **உக்ரைனுக்கு எதிரான போரை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என, இருதரப்புப் பேச்சின் போது, ரஷ்ய ஜனாதிபதி புடினை பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.**



உக்ரைன் மீது கடந்த 2022 இல் ரஷ்யா தொடர்ந்த போர், தற்போதும் தொடர்கிறது.

இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், சீனாவின் தியான்ஜினில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டுக்கு இடையே, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை, பிரதமர் மோடி நேற்று முன்தினம் சந்தித்தார்.

அப்போது, இருதரப்பு உறவுகள், உக்ரைன் போர் உட்பட உலகளாவிய பிரச்சினைகள் குறித்து இருவரும் விவாதித்தனர்.

உக்ரைனில் நீடித்த அமைதிக்கான பாதையை விரைவாகக் கண்டறிய வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாகும்.

சமாதானத்தை நோக்கி சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நாங்கள் வரவேற்கிறோம்.

மேலும், இம்முயற்சியில் ஆக்கப்பூர்வமான முன்னேற்றம் ஏற்படும் என நம்புகிறேன் எனத் தெரிவித்தார். (நி)

## பிரமாண்டமான இராணுவ அணிவகுப்பை நடத்தினார் சீன ஜனாதிபதி




(பீஜிங்)

ரஷ்யாவின் விளாடிமிர் புடின் மற்றும் வட கொரியாவின் கிம் ஜாங் உன் ஆகியோரின் பங்களிப்புடன் நேற்று புதன்கிழமை தனது நாட்டின் மிகப்பெரிய இராணுவ அணிவகுப்பை சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் நடத்தினார்.

இதன் போது பேசிய சீன ஜனாதிபதி, உலகம் அமைதி அல்லது போருக்கு இடையேயான தேர்வை எதிர்கொள்கிறது என்று தியானன்மென் சதுக்கத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கூடியிருந்த கூட்டத்தில் வலியுறுத்தினார்.

இரண்டாம் உலகப்போரின் முடிவில் ஜப்பான் தோல்வியடைந்த 80 ஆண்டுகளைக் குறிக்கும் இந்த ஆடம்பர நிகழ்வை மேற்கத்தேய தலைவர்கள் பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## பஞ்சாபில் கனமழை 29 பேர் உயிரிழப்பு!



(டில்லி)

பஞ்சாப் மாநிலத்தில் பெய்த கனமழையால், 29 பேர் உயிரிழந்ததுடன்மேலும் 2.5 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் ஜம்மு காஷ்மீரில் உள்ள நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக, சட்லஜ், பியாஸ் உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இதன் காரணமாக பஞ்சாப் பெரும் வெள்ளப் பெருக்கை எதிர்நோக்கி வருகிறது.

மேலும் வெள்ளத்தால், குருதாஸ்பூர், பதான்கோட், பாசில்கா, கபுர்தலா, பெரோஸ்பூர், ஹோஷியார்பூர் உள்ளிட்ட கிராமங்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.


தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அனைத்து கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கும் செபரெம்பர் 3ஆம் திகதி வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் ஒரு மாதத்தில் மாநிலத்தில் உள்ள 23 மாவட்டங்களில் 12 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இது பல தசாப்தங்களில் பஞ்சாபைத் தாக்கிய மிக மோசமான வெள்ளப் பேரழிவுகளில் ஒன்றாகும் என மாநில அரசு தெரிவித்துள்ளது. (நி)

## குண்டு துளைக்காத ரயிலில் சீனா சென்ற வடகொரிய ஜனாதிபதி



(பீஜிங்)

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், குண்டு துளைக்காத சிறப்பு ரயில் மூலம் சீனாவுக்குச் சென்றுள்ளார்.

வடகொரியாவின் தலைநகர் பியாங்யாங்கில் இருந்து புறப்பட்ட அவர், நேற்று சீனா சென்றடைந்தார்.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பானுக்கு எதிராக சீனா வெற்றி பெற்ற தன் 80ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு, சீன தலைநகர் பீஜிங்கில் நடைபெறும் இராணுவ அணிவகுப்பில் கலந்து கொள்ளவே கிம் ஜாங் உன் அங்கு சென்றார். (நி)

## பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல் 11 பேர் உயிரிழப்பு : 30 பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நடந்த தற்கொலை குண்டுவெடிப்பு தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்தனர்.


தென்மேற்கு மாகாணமான பலுசிஸ்தானின் தலைநகர் குவெட்டாவில் மறைந்த தேசியவாத தலைவர் சர்தார் அத்தாவுல்லா மெங்கல்லின் நினைவு தினத்தை முன்னிட்டு பலுசிஸ்தான் தேசிய கட்சி சார்பில் நேற்று முன்தினம் பேரணி நடத்தப்பட்டது.

பேரணி முடிந்து மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தபோது மைதானத்தின் வாகன நிறுத்துமிடத்தில் இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

பேரணியில் கலந்து கொண்ட அத்தாவுல்லா மெங்கல்லின் மகன் சர்தார் அக்தர் மெங்கல் பாதுகாப்பாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

பலுசிஸ்தானில் தனிநாடு கோரும் பிரிவினைவாதிகள் தொடர்ந்து பயங்கரவாத தாக்குதல்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (நி)



புறக்கணித்து வருகின்றனர்.

உக்ரைன் போர் மற்றும் கிம்மின் அணுசக்தி இலட்சியங்கள் காரணமாக மேற்கத்தேய நாடுகளின் விரோதிகளாக பார்க்கப்படும் புடின் மற்றும் கிம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக இந் நிகழ்வில் பங்கெடுத்திருந்தனர்.

சீனாவின் இராணுவ வலிமை, இராஜதந்திர செல்வாக்கை வெளிப்படுத்த அரங்கேற்றப்பட்ட இந்த நிகழ்வு, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வர்த்தக வரிகள் மற்றும் நிலையற்ற கொள்கை வகுத்தல் ஆகியவை பங்காளிகள் மற்றும் போட்டியாளர்களுடனான அதன் உறவுகளைச் சீர்குலைக்கும் நேரம் வந்துள்ளது.

இந்த அணி வகுப்பில் படைப்பலம், ஏவுகணைகள், டாங்கிகள் மற்றும் ட்ரோன்கள் போன்ற அதிநவீன இராணுவ உபகரணங்கள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டன.

நிகழ்வுக்கு முன்னதாக முன்னாள் தலைவர் மாவோ சேதுங் அணிந்திருந்த உடையை அணிந்திருந்த ஜின்பிங், 20இற்கும் மேற்பட்ட தலைவர்களை சிவப்பு கம்பள வரவேற்புடன் வரவேற்றார். (நி)

## வெனிசுலா கப்பல் மீது அமெரிக்க இராணுவம் தாக்குதல்


### 11 பேர் உயிரிழப்பு

(வெனிசுலா)

வெனிசுலா கடற்கரையை அண்டிய கடற்பரப்பில், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட கப்பல் மீது அமெரிக்க இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர்.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுலாவின் ஜனாதிபதியாக நிக்கோலஸ் மதுரோ மூன்றாவது முறையாக பதவி வகித்து வருகிறார்.

அவர், உலகின் மிகப் பெரிய போதைப்பொருள் கடத்தல்காரர்களில் ஒருவராக செயற்படுவதாகவும், போதைப்பொருள் கும்பல்களுடன் இணைந்து அமெரிக்காவிற்குள் போதைப்பொருட்களை விநியோகம் செய்வதாகவும் கடந்த 2020ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத இராசி பலன்கள்

## ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும்!



**துலாம்: கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சந்திரன் - பஞ்சம ஸ்தானத்தில் சனி, இராகு - பாக்கிய ஸ்தானத்தில் குரு - தொழில் ஸ்தானத்தில் சுக்கிரன் - லாப ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது - அயன சயன போக ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 11.09.2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து புதன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.09.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் இராசிக்கு மாறுகிறார்.

15.09.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.09.2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து சூரியன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.09.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து புதன் இராசிக்கு மாறுகிறார்.

**பலன்கள்:** துணிச்சலாக காரியங்களில் ஈடுபடும் அதே நேரத்தில் நியாயமாகவும், நேர்மையாகவும் அதனை செய்து முடிக்கும் குணமுடைய துலா இராசியினரே! இந்த காலகட்டத்தில் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். பயணங்கள் மூலம் இலாபம் கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும்படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். மனோ தைரியம் அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும்.

தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழில் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக நடக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும்.

கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் மனம் மகிழும் படி தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். விருப்பங்கள் கைகூடும். அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்து செல்வது நன்மை தரும்.

பெண்களுக்கு மனம் மகிழும்படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிக நாட்டம் ஏற்படும். அரசியல்வாதிகள் கட்சிப் பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. எதிர்க்கட்சியினரின் உதவி கிடைக்கும். கட்சித் தலைமை உங்களை நம்பி சில இரகசியப் பொறுப்பை ஒப்படைக்கும்.

கலைத்துறையினர் புதிய வாய்ப்புகளில் வெற்றி அடைவர்.




உங்களை உதாசீனப்படுத்திய நிறுவனமே அழைத்துப் பேசும். மூத்த கலைஞர்களிடம் சில நுணுக்கங்களை கற்றுத் தெளிவீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள். நண்பர்கள் மத்தியில் மதிப்புக் கூடும்.

**சித்திரை 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் தேவையற்ற பிரச்சனைகளை தலை தூக்கச்செய்யும். எனவே சாதுரியமாக பேசி எதையும் சமாளிப்பது நல்லது. பொதுவான காரியங்களில் ஈடுபடும் போது கவனமாக இருப்பது நல்லது. வாகனங்களை பயன்படுத்தும் போது எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**சுவாதி:** இந்த மாதம் எந்த ஒரு விவகாரத்தையும் எதிர் கொள்ளும் மன வலிமை உண்டாகும். எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. எதிர்பாராத சம்பவங்களால் இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். சந்திரன் சஞ்சாரம் உடல் ஆரோக்கியம் மனதில் உற்சாகத்தை தரும்.

**விசாகம் 1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த மாதம் அவ்வப்போது ஏதாவது தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சற்று கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கடன் பிரச்சினைகள் குறையும். போட்டிகள் நீங்கும். வர வேண்டிய பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகஸ்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். திறமையான செயல்கள் மூலம் பாராட்டு கிடைக்கும்.

**பரிகாரம்:** மகாலட்சுமியை வணங்க கடன் பிரச்சினை தீரும். மன நிம்மதி கிடைக்கும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** செவ்வாய் - வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 13, 14

**அதிர்ஷ்ட தினங்கள்:** 7, 8

## தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும்!



**விருச்சிகம்: கிரகநிலை** - இராசியில் சந்திரன் - சுக ஸ்தானத்தில் சனி, ராகு - அஷ்டம ஸ்தானத்தில் குரு - பாக்கிய ஸ்தானத்தில் சுக்கிரன் - தொழில் ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது - லாப ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 11.09.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து புதன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.09.2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15.09.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.09.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து சூரியன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.09.2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து புதன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** எந்த ஒரு விடயத்திலும் அவசரம் காட்டினாலும் அதே நேரத்தில் அதில் உள்ள நன்மை தீமைகள் பற்றி ஆலோசித்து முடிவு எடுக்கும் விருச்சிக இராசியினரே! இந்த மாதம் வீடு - மனை - வாகனம் சம்பந்தமான காரியங்களில் எதிர்பார்த்த பலன்கள் கிட்டும். காரிய தடை தாமதம் ஏற்படும். எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காமல் இழுபறியாக இருக்கும். ஆனாலும் மனமகிழும்படியாக எல்லாம் நடந்து முடியும்.

தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சுணக்க நிலை மாறும்.

பணவரத்து இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். உங்களுக்கு நற்பெயர் கிடைப்பதில் எந்த இடையூறும் இருக்காது.

குடும்பத்தில் இருந்து வந்த மனக் குழப்பங்கள் மாறும். ஆனாலும் அனைத்து விடயங்களிலும் நீங்கள் அனுசரித்து செல்வது நல்லது.

கணவன் மனைவிக்கிடையே எதிர்பாராத மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் பற்றிய கவலை உண்டாகும். நிதானமாக செய்யும் செயல்கள் வெற்றியை தரும்.

பெண்கள் [illegible] வெற்றிகரமாக [illegible]. கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். தொகுதி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது அவசியம். கட்சித் தலைமையின் அன்புக்கு பாத்திரமாவீர்கள்.

கலைத்துறையினர் புதுமையான சில படைப்புகளை வெளியிட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பர்.




படைப்புகளை வெளியிட சில போராட்டங்களை சந்திக்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை குறையும். அதிக மதிப்பெண் எடுக்க ஆர்வமாக படிப்பீர்கள்.

**விசாகம் 4ஆம் பாதம்:** இந்த மாதம் குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் தீரும். எதை பற்றியும் கவலைப்படாமல் நினைத்த காரி[illegible]ல் கண்ணும் கருத்து[illegible]ருப்பீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கு வீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகளுக்காக பாடுபடுவீர்கள். நண்பர்கள், உற வினர்கள் மத்தியில் கௌரவம் கூடும்.

**அனுஷம்:** இந்த மாதம் இழுபறியாக இருந்த பிரச்சினைகள் சாதகமான முடிவு பெறும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும்.

உத்தியோகம் தொடர்பான பிரச்சினைகள் குறையும். தேவையான உதவி கிடைக்கும். கடன் பிரச்சினை குறையும். முன்னேற தேவையான உதவிகள் கிடைக்கும்.

**கேட்டை:** இந்த மாதம் வீண் பகைகள் ஏற்பட்டு விலகும். எவ்வளவு திறமையாக செயற்பட்டாலும் பாராட்டுக்கு பதில் விமர்சனம் கிடைக்கும். திடீர் கோபம் ஏற்படும். வீண் செலவும் இருக்கும். பிடிவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும்.

**பரிகாரம்:** திருமுருகாற்று படையை பாராயணம் செய்து வர கந்தன் அருளால் கண்பிணி நீங்கும். குடும்ப கஷ்டம் தீரும்;

**அதிர்ஷ்ட கிழமைகள்:** செவ்வாய் - வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 15, 16

**அதிர்ஷ்ட தினங்கள்:** 9, 10

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு வருடங்களின் பின்னர் திறந்து வைக்கப்பட்டது வவுனியா பொருளாதார மத்திய நிலையம்



(வவுனியா)

வவுனியாவில் கடந்த 2018 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பொருளாதார மத்தியநிலையம் 7 வருடங்களின் பின்னர் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக கடந்த 2018 ஆம் ஆண்டு வவுனியா மதவுவைத்த குளத்தில் 293 மில்லியன் ரூபாய் செலவில் விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டது.

அதனை ஓமந்தையில் அமைப்பதா அல்லது தாண்டிக் குளத்தில் அமைப்பதா என்று அரசியல்வாதிகளுக்கிடையில் ஏற்பட்ட இழுபறிகளுக்கு மத்தியில் மதவுவைத்த குளத்தில் அது அமைக்கப்பட்டது.

எனினும் அமைக்கப்பட்டு ஏழு வருடங்கள் கடந்த நிலையிலும் பல்வேறு காரணங்களால் அது இயங்க முடியாத சூழல் ஏற்பட்டதுடன் அதன் கட்டுமானத்திலும் பழுதுகள் ஏற்பட்டன.

இந்தநிலையில் குறித்த நிலையத்தில் மீண்டும் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு நேற்றையதினம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

குறித்த பொருளாதார மத்தியநிலையத்தில் 50 கடைகள் அனைத்து வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளதுடன் முதற்கட்டமாக 35 கடைகள் வவுனியா மொத்த வியாபார சந்தை வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கடை சதோச நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வர்த்தக வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் பிரதி அமைச்சர்களான எம்.ஜெயவர்த்தன, உபாலிசமரசிங்க, மாநகரசபை முதல்வர் சு.காண்டீபன், பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ. திலகநாதன் ஆகியோரால் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது. (8-250)

# இனப்படுகொலைக்கு நீதிகோரி கையெழுத்துப் போராட்டம்


(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மனிதப் புதைகுழிகள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு சர்வதேச நீதி கோரிய கையெழுத்துப் போராட்டம் சாவகச்சேரி, கொடிகாமம், பளை, பூநகரி, பரந்தன் ஆகிய இடங்களில் முன்னெடுக்கப்பட்டன.

(8-30-104-316-315)









## சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 200 | 300 | 250-300 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 190 | 170 | 240 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 150 | 100 | 200 |
| தக்காளி | 150 | 160 | 250 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 200 | 200 |
| கோவா | 320 | 280 | 300 | 200 | 300 |
| கரட் | 380 | 400 | 450 | 330 | 350 |
| பூசணி | 100 | 100 | 60 | 60 | 50 |
| புடோல் | 100 | 120 | 150 | 80 | 150 |
| வாழைக்காய் | 120 | 120 | 150 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 200-350 | 300 | 200 | 280 |
| பெரிய வெங்காயம் | 150 | 190 | 150 | 140 | 160 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 280 | 350 |
| வெண்டக்காய் | 150 | 140 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 300 | 200 | 200 | 230 | 300 |
| லீக்ஸ் | 280 | 250 | 250 | 150 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 300 | 230 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 400 | 320 | 300 |
| போஞ்சி | 600 | 500 | 500 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 40-120 | 100 | 90 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 500 | 550 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 100-200 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 600 | 600 | 450 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 300 | 250 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 200 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 80 | 200 |

# இராசிபலன்

04.09.2025
ஆவணி 19, வியாழக்கிழமை
துவாதசி பின்னரவு 2.50 மணிவரை

உத்தராடம் முன்னிரவு 11.18 மணி வரை
சுப நேரம் 7.35-9-05 மணிவரை
இராகு காலம் 1.35 - 3.05 மணிவரை

சந்திராஷ்டமம்
மிருகசீரிடம்,
திருவாதிரை

வள்ளவன்




வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் மீதான அக்கறை கூடும், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.




பயணங்களால் பலனுண்டு, கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு




குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காணும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், முத்தான வாய்ப்புக்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




நட்பு வட்டம் விரிவடையும் நாள், தொழிலில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு முன்னேற்றம் காண வேண்டிய நாள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாடு குதூகலம் தரும்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தேவையற்ற மனக்குழப்பங்களை தவிர்ப்பது நல்லது, காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், சயன சுக குறையுண்டு.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




நம்பிக்கைகள் நடைபெற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வெளிவழி ஒத்துழைப்புக் கிடைக்கும்.




வழிபாடு காரிய வெற்றி தரும், உன்னதமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




வழிபாட்டில் நம்பிக்கை கூடும், உறவுகள் வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், செல்வ நிலை உயரும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

ஒவ்வொரு மனிதனும் அவனுடைய பாவத்தை சுமக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 858





உன் அத்தையைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள் என்றாயே, அவள் இப்போது எங்கே? நான் அனுப்பிய பல்லக்கில், நீ எப்படி ஏறிக்கொண்டாய்? எவ்விடத்தில் ஏறிக் கொண்டாய்?" என்று அநிருத்தர் கேட்டார்.

"ஐயா! வாயில்லாத ஊமையாகிய என் அத்தையைத் தாங்கள் எதற்காகக் கைப்பற்றிக் கொண்டு வர ஆட்களை அனுப்பினீர்கள்?"

"மகளே! அதை உன்னிடம் சொல்வதற்கில்லை. அது பெரிய இராஜாங்க சம்பந்தமான விடயம்."

"தந்தையே! அப்படியானால், தாங்கள் கேட்ட கேள்விகளுக்கு நானும் மறு மொழி சொல்ல இயலாது." "சொல்லும்படி செய்வதற்கு வழிகள் இருக்கின்றன!" "என்னிடம் பலிக்காது!"

"பெண்ணே! உன்னைப் பாதாளச் சிறைக்கூடத்துக்கு அனுப்புவேன்!"

"எந்தப் பாதாளச் சிறையிலும் என்னை அடைத்து வைத்திருக்க முடியாது." "பாதாளச் சிறைக்கு ஒரு தடவை போனவர்கள் திரும்பி வரவில்லை."

"திரும்பி வந்த ஒருவனை எனக்குத் தெரியும், ஐயா! நேற்றுக்கூடச் சேந்தன் அமுதனுடன் பேசிக் கொண்டு தான் பிரயாணம் செய்தேன்" "அவன் யார் சேந்தன் அமுதன்?"

"அவன் என்னுடைய இன்னொரு அத்தையின் மகன். அவனும் நானுமாகத்தான் கோடிக்கரையிலிருந்து வந்து கொண்டிருந்தோம்." "எதற்காக மகளே?"

"இந்தத் தஞ்சாவூரிலுள்ள மாடமாளிகை, கூடகோபுரங்களைப் பார்க்க வேண்டுமென்று வெகு காலமாக ஆசை உண்டு. சக்கரவர்த்தி சுந்தர சோழரைத் தரிசிக்க வேண்டும் என்றும் ஆவல் கொண்டிருந்தேன். சக்கரவர்த்திக்கு உடல் நலமில்லை என்று சொன்னார்களே? இப்போது எப்படியிருக்கிறது ஐயா! நான் பார்க்கலாமா?"

"அப்படியேதான் இருக்கிறது, மகளே! அபிவிருத்தி ஒன்றுமில்லை, ஆகையால் சக்கரவர்த்தியைத் தரிசிக்கும் எண்ணத்தை மறந்துவிடு!"

"அது எப்படி மறக்க முடியும் ஐயா! சக்கரவர்த்தியை நான் பார்த்தேயாக வேண் டும். பார்த்து, அவருடைய தர்ம ராஜ்யத்தில் பெண்களைப் பலவந்தமாகப் பற்றிக் கொண்டு வரும் அக்கிரமம் நடக்கும் செய்தியைச் சொல்ல வேண்டும்"

"பெண்ணே! உன்னோடு வெறும் விவாதம் செய்து கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை. உன்னைப் பலவந்தமாகப் பற்றிக்கொண்டு வர நான் கட்டளையிடவும் இல்லை. நான் அனுப்பிய பல்லக்கில் நீ எப்படி ஏறிக் கொண்டாய், அதைச் சொல்! யாராவது உன்னைப் பலவந்தமாகப் பிடித்துப் பல்லக்கில் ஏற்றினார்களா?"

"இல்லை, சுவாமி! அது மட்டும் இல்லை. தஞ்சைக் கோட்டைக்கு அருகில் வரும் சமயத்தில் இந்தப் பல்லக்கு வெறுமையாக இருந்தது. மழையாயிருக்கிறதே என்று நானாகவேதான் பல்லக்கில் ஏறிக் கொண்டேன்"

முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் தமது சீடனாகிய ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "ஒருவாறு எனக்கு இப்போது விடயம் விளங்குகிறது.

(தொடரும்...)

## வூலிங் விநியோகங்களுடன் இலங்கையின் பசுமை இயக்கத்திற்கு பிரவுன்ஸ் EV வலுவூட்டுகிறது




ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு பின் டார்லி வீதியில் உள்ள பிரவுன்ஸ் EV காட்சியறையில் நடைபெற்ற ஒரு பிரமாண்டமான நிகழ்வில், LOLBrowns EV, நேர்த்தியான Wuling Binguo மற்றும் பல்துறை Wuling Cloud ஆகியவற்றைக் கொண்ட 90 Wuling மின்சார வாகனங்களை பெருமைமிக்க புதிய உரிமையாளர்களுக்கு சம்பிரதாயபூர்வமாக வழங்கியதன் மூலம், நிலையான இயக்கம் நோக்கிய இலங்கையின் பயணம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியது.

இந்த நிகழ்வில் LOLC குழுமத்தின் முன்னணி நபர்கள் மற்றும் அதன் உலகளாவிய பங்காளிகள் கலந்து கொண்டனர். இதில் LOLC ஹோல்டிங்ஸின் குழும முகாமைத்துவ பணிப்பாளர் கபில ஜெயவர்தன, LOLC ஹோல்டிங்ஸின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி. கல்ஷா அமரசிங்க, பிரவுன்ஸ் EVயின் பணிப்பாளர் நிவேன் நாணயக்கார மற்றும் வுலிங் பிராண்டின் உலகப் புகழ்பெற்ற உற்பத்தியாளரான PT SGMW இன் குளோபல் RHD சந்தையின் மூத்த மேலாளர் லி ஜியாகாங் ஆகியோர் அடங்குவர்.

இலங்கையில் SGMW EV-களின் பிரத்தியேக விநியோகஸ்தராக, பிரவுன்ஸ் EV, வாகன விநியோகத்திற்கு அப்பாற்பட்ட ஒரு முழுமையான உரிமை சுற்றுச்சூழல் அமைப்பை நிறுவியுள்ளது. LOLC ஃபைனான்ஸ் மூலம் வடிவமைக்கப்பட்ட நிதியுதவி மற்றும் LOLC பொது காப்பீடு மூலம் விரிவான பாதுகாப்பு, LOLC மோட்டார்ஸ் மற்றும் பிரவுன்ஸ் EV Care மூலம் சிறப்பு விற்பனைக்குப் பிந்தைய சேவை வரை, ஒவ்வொரு வாடிக்கையாளர் தொடர்பு புள்ளியும் நம்பிக்கை, வசதி மற்றும் முழுமையான மன அமைதியை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வூலிங் வாகனமும் கடுமையான முன் விநியோக ஆய்வுக்கு (PDI) உட்படுகிறது. பேட்டரி ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் முதல் மென்பொருள் மற்றும் செயல்திறன் சோதனைகள் வரை அனைத்தையும் மதிப்பிடுகிறது. இந்த நுணுக்கமான செயல்முறை, வழங்கப்படும் ஒவ்வொரு வாகனமும் வீதிக்குத் தயாராக, நம்பகமானதாகவும், தடையற்ற ஓட்டுநர் அனுபவத்தை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டதாகவும் இருப்பதை உறுதி செய்கிறது.

எதிர்காலத்தைப் பொறுத்தவரை, இலங்கையின் மிகவும் விரிவான நாடு முழுவதும் சார்ஜிங் வலையமைப்பை நிறுவ, உலகின் மிகப்பெரிய EV சார்ஜிங் உபகரண உற்பத்தியாளரான TELD உடன் பிரவுன்ஸ் EV கூட்டு சேர்ந்துள்ளது.

உரிமையாளர்கள் நாடு முழுவதும் வேகமாக சார்ஜ் செய்யும் வசதிகளை வசதியாக அனுபவிப்பார்கள். கூடுதலாக, ஒவ்வொரு பிரவுன்ஸ் EV வாடிக்கையாளரும் 7 kW வீட்டு சார்ஜிங் யூனிட்டை இலவசமாகப் பெறுவார்கள். இது அதிக வெப்பத்தைத் தடுக்கும். பேட்டரி ஆயுளை நீட்டிக்கும் மற்றும் மன அமைதியையும் நீடித்த மதிப்பையும் வழங்கும் கட்டுப்படுத்தப்பட்ட சார்ஜிங்கை உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.


நிறுவல் ஒரு அர்ப்பணிப் புள்ள குழுவால் மேற்கொள்ளப்படும், இது தடை யற்ற மற்றும் தொந்தரவு இல்லாத அனுபவத்தை உறுதி செய்யும்.

## கிறிசலிஸ் மற்றும் கெயார் நிறுவனங்களின் ஆதரவுடன் பெண் தலைமைத்துவ குடும்பங்களை வலுவூட்டும் செயற்றிட்டம்



நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் (MSMEs) காலநிலை மாற்றங்களால் தூண்டப்படும் அனர்த்தங்களை எதிர்கொள்ளும் தாங்கு திறனைப் பலப்படுத்துவதற்கான ஒரு முக்கிய நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றது. Chrysalis (கிறிசலிஸ்) ஜேர்மனியின் CARE (கெயார்) அமைப்பின் ஆதரவுடன் இணைந்த விதத்தில் இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான காலநிலைமாற்ற பாதிப்புக்களுக்கு ஈடுகொடுக்கும் முதலாவது சுழற்சி முறையிலான நிதியத்தை கொழும்பில் உத்தியோகபூர்வமாக தொடக்கி வைத்தது. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான ஜேர்மன் சமஸ்டி அமைச்சு (BMZ), ஐரோப்பிய யூனியன் மற்றும் Co-Impact என்பவற்றின் இணை நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்த முன்னெடுப்பு Chrysalis நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படுகின்றது. அது காலநிலை மற்றும் அனர்த்த இடர் நிதிப்படுத்தல் மற்றும் காப்புறுதி (CDRFI) என்ற விரிவான கட்டமைப்பின் ஒரு அங்கமாகும். வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதும், அனர்த்தத்தின் பின்னர் பழைய நிலைக்கு மீள்வதைத் துரிதப்படுத்துவதும், ஊவா மற்றும் மத்திய மாகாணங்கள் என்பவற்றில் செயற்பட்டுவரும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு (MSMEs) மத்தியில் நீண்டகால தாங்கு திறன்மிக்க நடைமுறைகளை வேரூன்றச் செய்வதும் இந்த நிதியத்தின் நோக்கமாகும்.

நுண்ம, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து வருவதுடன், வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம், பொருளாதார பன்முகப்படுத்தல் மற்றும் சமூக அபிவிருத்தி என்பவற்றுக்கு அவை கணிசமான அளவிலான பங்களிப்புக்களை வழங்கி வருகின்றன. இந்தத் தொழில்முயற்சிகளில் பெரும்பாலானவை பெண்களினால் நெறிப்படுத்தப்படுபவையாக அல்லது பெண்களினால் வலுவூட்டப்படுபவையாக இருந்து வருவதுடன், அது குடும்ப வருமானத்தை எடுத்து வருவதற்கு மட்டுமன்றி, பால்நிலை சமத்துவம் மற்றும் சமூக தாங்குதிறன் என்பவற்றை மேம்படுத்துவதற்கும் ஒரு முக்கியமான பங்களிப்பை வழங்குகின்றது. நாட்டில் ஏற்படும் அனர்த்தங்கள் தொழில் முயற்சிகளின் செயற்பாடுகளைச் சீர்குலைக்கிறது. புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கும் இந்த சுழற்சி முறையிலான நிதியம் பதுளை, மொனராகலை, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் செயற்படும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோரின் ஒன்றியத்தின் (MSME Consortia) ஊடாக துரித கதியில் நிதியுதவியை வழங்கவிருப்பதுடன், வியாபரங்கள் வெகு விரைவில் மீள்வதற்கான இயலுமையையும் பெற்றுக் கொடுக்கும். மேலும், அது பெண்களின் பொருளாதார பங்கேற்பை பாதுகாத்து, அனர்த்தங்களின் பின்னர் வணிக முயற்சிகள் தொடர்ந்து செயற்படுவதனையும் உறுதிப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒரு விஷயத்தைப் புரிய வைக்கிறது,
ஆனால் அனுபவமே அதை உணர வைக்கிறது..
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கச்சதீவு தமிழர்களை பிரிக்கும் பிரமாஸ்திரம்

தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை ஆரம்பித்த நடிகர் விஜய் தேர்தல் களத்தில் இறங்குவதற்கான அஸ்திரமாக கச்சதீவை எடுத்துக் கொண்டார்.

ஆம், மதுரையில் நடந்த விஜயின் கட்சி மாநாட்டில் நடிகர் விஜய் கச்சதீவை மீட்க வேண்டும் என உரையாற்றியபோது சுமார் இரண்டு இலட்சம் மக்களின் கரகோசம் வானைப் பிளந்தது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனித்தாக வேண்டும். அதாவது கச்சதீவு பற்றி ஏலவே பலரும் பேசியுள்ளனர்.

தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கூட, கச்சதீவை மீட்க வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இதற்கும் மேலாக, பாரதப் பிரதமர் மோடி அவர்கள் கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் தமிழகத்துக்கு வருகை தந்தபோது, கச்சதீவை நாம் மீளப் பெற வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இவ்வாறு முக்கிய தலைவர்கள் கச்சதீவைப் பற்றிக் கதைத்தபோதெல்லாம் அமைதி காத்த இலங்கை அரசு; நடிகர் விஜய் கச்ச தீவைப் பற்றிக் கூற – அதற்கு இரண்டு இலட்சம் தமிழக மக்கள் கரகோசம் செய்த நிலையில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் அது விடயத்தில் அதீத கவனம் செலுத்தத் தலைப்பட்டுள்ளது.

ஆம், கச்சதீவு மீது இலங்கை அரசாங்கம் மிகுந்த கருசனையோடு இருக்கிறது என்பதை வெளிப்படுத்தும் பொருட்டு, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது யாழ்ப்பாண விஜயத்தின்போது கச்சதீவுக்குச் சென்று கச்சதீவு தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியாவுக்கு குறிப்பாலுணர்த்தினார்.

இதுதவிர, கச்சதீவு எங்களின் சொத்து. அதை எவருக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது என்பதையும் ஜனாதிபதி அநுர வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

ஆக, எமக்கு இருக்கின்ற இனப் பிரச்சினை என்பது இப்போது திசை திருப்பப்பட்டுள்ளது.

ஆம், இனி இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பதைவிட, கச்சதீவு பற்றிய கலந்துரையாடல்களே எம்மை ஆக்கிரமிக்கப் போகின்றன.

இதற்கும் மேலாக, நடிகர் விஜய் மூட்டிய தீ இனி தமிழ் நாட்டில் பற்றி எரியும்.

அதேநேரம் எங்கள் வடபகுதியிலும் கச்சதீவு எமக்குத் தேவை என்ற கோசத்துக்கு குறைவிருக்காது.

ஆக, ஒட்டுமொத்தத்தில் கச்சதீவு விவகாரம் தமிழகத்துச் சகோதரர்களையும் ஈழத் தமிழ் மக்களையும் பகை கொள்ள வைக்கும்.

என்ன செய்வது மண் உரிமை கேட்ட எமக்கு இப்போது கச்சதீவில் மோதலுக்கு இடம் தரப்பட்டுள்ளது.

இனி அதற்கான ஆர்ப்பாட்டங்களே அங்கும் இங்குமாக நடக்கும்.

அதாவது தமிழர்கள் தமிழர்களுடன் மோதிப் பிளவுபடுவதற்கான பிரம்மாஸ்திரமாக கச்சதீவு இருக்கப்போகிறது.

என்ன செய்வது எழுதாக்குறை அழுதால் தீருமோ.

# இலங்கையில் தமிழருக்கு நீதி இல்லை என்பதை ஜனாதிபதியின் யாழ்.விஜயம் உறுதிப்படுத்தியுள்ளது

### கஜேந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தீவில் தமிழருக்கு நீதி இல்லை என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் யாழ்.விஜயம் உறுதிப்படுத்தியுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

செம்மணிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்மம் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொள்வதற்கு முன்னதாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதி அநுர, செம்மணியைப் பார்வையிடாமல் சென்றது பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியின் வடிவமாகவே பார்க்க வேண்டியுள்ளது.

70 வருடங்களாக ஆட்சி செய்த அரசாங்கங்கள் எதைச் செய்தார்களோ அவற்றையே ஜே.வி.பி என்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போதைய ஆட்சியிலும் பின்பற்றி வருகிறது.

இப்படிப்பட்ட அரசாங்கத்தின் தலைவராக இருக்கின்ற ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு எம்மில் சிலர் செம்மணி விவகாரத்தில் நீதி நிலைநாட்ட உதவ வேண்டுமெனக் கடிதம் எழுதுவது முட்டாள்தனமான செயற்பாடு என தற்போது விளங்கியிருக்கும்.

ஆகவே தமிழர் பகுதிகளில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைகள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்வதே தீர்வுக்கு வழிவகுக்கும் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஆடியபாதம் வீதியூடாக பகலில் டிப்பர் வாகனம் பயணிக்கத் தடை

### நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் மயூரன் அதிரடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் சந்தியிலிருந்து புதிய செம்மணி வீதிச் சந்தி வரையான ஆடியபாதம் வீதியூடாக டிப்பர் வாகனங்கள் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் ஏனைய பாரவூர்திகள் காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை மற்றும் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரையும் பயணிப்பதற்கு நல்லூர் பிரதேச சபை முற்றாகத் தடை விதித்துள்ளது

முன்பள்ளி சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் நலன்கருதியும் உத்தியோகத்தர்கள் பணிக்குச் செல்லும் நேரங்கள் மற்றும் அண்மையில் ஏற்பட்ட வீதி விபத்துக்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும் பொதுப்போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்குடன் இந்தத் தடை நல்லூர் பிரதேச சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வாகன சாரதிகள் இந்த விதிமுறைகளுக்கமைய செயற்படுமாறு நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் அறிவுறுத்தியுள்ளார். (ம-7)

## யாழ்- கொழும்பு இடையே அதிசொகுசு பஸ் சேவை

### இ.போ.சவினால் முன்னெடுப்பு

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலைக்கு அண்மையில் இரு அதிசொகுசு பேருந்துகள் கையளிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் - கொழும்பு இடையான அதிசொகுசுப் பேருந்து சேவையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் குறித்த பேருந்தானது இரவு 8.45 மணிக்கு யாழில் இருந்து தனது கொழும்பு நோக்கிய தினசரிச் சேவையை முன்னெடுக்கவுள்ளது.

இப்பேரூந்தில் பயணம் செய்வதற்கான ஆசனப்பதிவுகளை நிகழ்நிலையில் 8.LTB online Booking என்ற வெப்தளத்தினூடாகவும் யாழ்.மத்திய பேரூந்து நிலையத்திலுள்ள காரியாலயத்தில் நேரடியாகவும் மேற்கொள்ள முடியும்.

இச்சேவைக்கான ஒருவழிக் கட்டணமாக ரூ 2,800.00 மாத்திரமே அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தென்னிலங்கையை உலுக்கும் துப்பாக்கிச்சூட்டுக் கலாசாரம்

### நேற்றும் இளைஞனொருவன் மீது சூடு

தென்னிலங்கையில் துப்பாக்கிச்சூட்டுக் கலாசாரம் அதிகரித்து வரும் நிலையில் மாளிகாவத்தை ஜும்மா மஸ்ஜித் வீதியில் நேற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வணிக இடத்தில் இருந்த ஒரு இளைஞனொருவரை குறிவைத்தே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இளைஞன் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்கள் ரி - 56 துப்பாக்கியைப் பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தியதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## 506 மின்சார வாகனங்கள் சுங்கத்தால் விடுவிப்பு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 506 BYD மின்சார வாகனங்கள் சுங்கத் திணைக்களத்தால் விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்கள் மோட்டார் திறன் (motor capacity) தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுகளால் இலங்கைச் சுங்க சேவையால் தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

மின்சார வாகனங்களுக்கு மேலதிக வங்கி உத்தரவாதத்தை சமர்ப்பித்த பிறகு விடுவிக்க இலங்கை சுங்கம் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளது.

வாகனங்களை இறக்குமதி செய்த நிறுவனத்தின் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்த இணக்கம் அறிவிக்கப்பட்டது. (ம-7)

## கந்தபுராண உரைநூல் வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சைவப் பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் யோகர் சுவாமிகளின் நூற்றாண்டைக்கடந்த விழாவை முன்னிட்டு, கந்தபுராணம் மூலமும், உரையும் வெளியீட்டு நிகழ்வானது நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு யாழ்ப்பாணம் அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

யோகர் சுவாமிகள் காரைநகருக்கு விஜயம் சென்றமை மற்றும் கச்சியப்ப சிவாச்சாரியார் காஞ்சிக்குமரக் கோட்டத்தில் கந்தபுராணத்தை அரங்கேற்றிய அதே ஆண்டு, அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்திலும் அரங்கேற்றப்பட்டதை நினைவுபடுத்தும் வகையிலும் நூற்றாண்டைக் கடந்த நிகழ்வின் ஒரு பகுதியாக இந்த நிகழ்வு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 51

சொக்கன்

## ரோம், ரொமான்ஸ், ரோதனை

சிண்டி என்ற பெயரில் மொர்டெசாய் வனுனுவுக்கு அறிமுகமான அந்தப் பெண்ணின் நிஜப் பெயர் செரில்.

அமெரிக்காவில் பிறந்த செரில் படிப்பதற்காக இஸ்ரேல் வந்தார். இந்த ஊர் மொழி, கலாசாரம், சரித்திரம் எல்லாம் அவரை மிகவும் ஈர்த்தது. இனிமேல் இதுதான் என் நாடு என்று தோன்றிவிட்டது இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிடத் தீர்மானித்தார்.


செரிலுக்கு இஸ்ரேல் பிடித்துப்போக இன்னொரு முக்கியமான காரணம் அவர் காதலில் விழுந்திருந்தார்!

இஸ்ரேல் இராணுவத்தின் உளவுப் பிரிவு அமான் அங்கே வேலை செய்கிற ஓஃப்பர் பென்டாவ் என்கிற அதிகாரியைக் காதலித்துக் கல்யாணம் செய்துகொண்டார் செரில்.

இவர்களுடைய திருமணத்திற்கு நிறைய உளவாளிகள் மொசாட் பெருந்தலைகள் வந்திருந்தார்கள். ஓஃப்பருக்கும் செரிலுக்கும் வாழ்த்துச் சொல்லிக் கை குலுக்கி மொய் எழுதிக் கல்யாணச் சாப்பாடைக் கபளீகரம் செய்து முடித்தபிறகு அவர்கள் தங்களுக்குள் கிசுகிசுப்பாகப் பேசிக்கொண்டார்கள். செரில் ரொம்ப அழகு இல்லை?

ஆமா நமக்கு ஒத்து வருவாளா? பேசிப் பார்க்கலாமா? ஷ்யூர் தப்பாக நினைக்க வேண் டாம் அழகான பெண்களை எங்கே பார்த்தாலும் மொசாட் அதிகாரிகள் எக்ஸ்டரா சுறுசுறுப்பாகிவிடுவார்கள் காரணம் ஜொள் அல்ல அவர்களைத் தங்களுடைய ஸ்பெஷல் உளவாளிகளாக வளைத்துப்போட முடியுமா என்கிற ஆர்வம்தான்.

திருமணம் முடிந்து கொஞ்ச நாள் கழித்து சில உளவாளிகள் செரிலைச் சந்தித்தார்கள்.



மொசாட்டுக்கு வேலை செய்ய விருப்பமா? என்று விசாரித்தார்கள்.

ஆரம்பத்தில் செரிலுக்க அதிர்ச்சி பின்பு யோசித்துப்பார்த்த பிறகு டபுள் ஓகே சொல்லிவிட்டார்.

மொசாட்டில் செரில் மாதிரி அழகிய உளவாளிகள் நிறையப் பேர் உண்டு இவர்களுக்கு பாட் லெவெய்ஹா என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

பாட் லெவெய்ஹாக்களின் வேலை நைஸாகக் கடைக்கண் பார்வை காண்பித்து ஆண்களைக் கவிழ்ப்பது. அதற்கு மசியாவிட் டால் காதலிப்பது போல் பாவ்லா காட்டுவார்கள். அவர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றுவார்கள். சரியான நேரம் அமையும்போது மொசாட் பயில்வான்களிடம் மாட்டிக் கொடுத்து விடுவார்கள். அதன்பிறகு அடுத்த ஆளைக் கவிழ்க்கக் கிளம்பவேண்டியதுதான்.

லண்டனில் மொர்டெசாய் வனுனுவை வளைத்துப்போடுவதற்காக செரிலுக்கு ஸ்பெஷல் ட்ரெய்னிங் கொடுத்து அனுப்பிவைத்தது மொசாட் அவர்கள் எதிர்பார்த்தது போலவே மொர்டெசாய் ஜொள் விட்டுக்கொண்டு சிண்டியின் வலையில் வந்து விழுந்தார்.

இதைக் கவனித்த மொர்டெசாயின் நண்பர்கள் அவரை எச்சரித்தார்கள். ஜாக்கிரதைப்பா அந்தப் பெண்ணைப் பார்த் தால் நல்லவளாகத் தெரியவில்லை. அநாவசியமாக வம்பில மாட்டிக் காதே.

இதுமாதிரி எச்சரிக்கைகளை மொர்டெசாய் கண்டுகொள்ளவில்லை உங்களுக்கெல்லாம் என்மேல பொறாமை என்று அலட்சியப்படுத்திவிட்டார்.

பின்னே? சிண்டி மாதிரி அழகான ஒரு பெண்ணின்மீது எந்த ஆணுக்குதான் சந்தேகம் வரும்? வழக்கம் போல் காதல் அவருடைய கண்களை மறைத்துவிட் டது.

அதன்பிறகு மொர்டெசாயும் சிண்டியும் அடிக்கடி சந்தித்துப் பேசினார்கள். ரொம்ப நாளாகப் பெண் முகத்தையே பார்த்திருக்காத மொர்டெசாய்க்குச் சிண்டி ஒரு தேவதையாகத் தோன்ற ஆரம்பித்தாள்.

இப்போது மொசாட் தன்னுடைய திட்டத்தின் அடுத்த கட்டத்திற்கு வந்தது மொர்டெசாயை எப்போது எங்கே எப்படிக் கடத்துவது?

இங்கிலாந்து எல்லைக்குள் கடத்தல் கிடத்தல் என்று ஆரம்பித்தால் மார்கரெட் தாட்சர் தொலைத்துவிடுவார். ஆகவே லஷ்மணக் கோட்டுக்குள் பாதுகாப்பாக இருக்கும் மொர்டெசாயை முதலில் வெளியே கொண்டுவரவேண்டும். அதற்குதான் சிண்டி.

அடுத்த நாள் சிண்டி மொர்டெசாயிடம் கொஞ்சிப் பேசினாள் எவ்ளோ நாளைக்குதான் நாம லண்டனையே சுத்திச் சுத்தி வர்றது ஒரு சேலஞ் சுக்காக எங்கேயாவது ஜாலியா வெளிநாடு போய்ட்டு வருவோமா?

சிண்டி இப்படிக் கேட்டதும் மொர்டெசாய்க்கு வாயெல் லாம் பல் பட்சி தானாக வந்து வலையில் விழுகிறது விடாதே பிடி!

சூப்பர் ஐடியா சிண்டி நாம எங்கே போகலாம்?

ரோம்ல எங்க அக்கா இருக்காங்க அவங்க வீட்ல தங்கிட்டு இத் தாலியைச் சுத்திப் பார்க்கலாமே!

மொர்டெசாய் பலியாடுபோல் தலையாட்டினார். அவர்களுடைய உல்லாசப் பயணத்துக்கான ஏற்பாடுகள் மளமளவென்று நடந்தன.

இதைப்பற்றிக் கேள்விப்பட்ட சன்டே டைம்ஸ் நிர்வாகம் டென்ஷனாகிவிட்டது. அவசரப்படாதீங்க இதுல உள்குத்து ஏதாவது இருக்குமோன்னு எங்களுக்குச் சந்தேகமா இருக்கு முதல்ல நாங்க அந்தப் பொண்ணைப் பார்த்துப் பேசணும் என்றார்கள்.

ஹலோ இது என்னுடைய பர்ஸனல் மேட்டர் நீங்க இதில தலையிட வேண்டாம். அவர்களுக்கு டாட்டா காண்பித்துவிட்டு சிண்டியுடன் ஜாலியாக ரோம்க்கு விமானம் ஏறிவிட் டார் மொர்டெசாய் வனுனு.

அப்போது அவருக்க தெரியாத விடயம் அதே விமானத்தில் இன்னும் சில மொசாட் ஏஜெண்ட்களும் பயணம் செய்தார்கள். மொர் டெசாய்க்குத் தெரியாமல் இரகசியமாக அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

ஆனால் ரொமான்ஸ் மயக்கத்தில் கிடந்த மொர்டெசாய் எதையும் கவனிக்கவில்லை. கனவுகளில் மிதந்தபடி ரோம் வந்து இறங்கினார். டாக்ஸி பிடித்து சிண்டியின் அக்கா வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து காலிங் பெல் அடித்தார்.

உள்ளே இன்னும் சில மொசாட் ஏஜெண்ட்கள் காத்திருந்தார்கள். சிண்டியை ஒதுக்கித் தள்ளிவிட்டு மொர்டெசாயைக் குண்டுக்கட்டாகத் தூக்கிப் போய் மயக்க மருந்து ஏற்றினார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை...

காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று காலை 9 மணிக்கு துர்க்காதேவி தேரில் ஆரோகணிப்பார். (ம-7)

## புகையிரதம்...

இடம்பெற்றுள்ளது.

இதில் சுன்னாகத்தைச் சேர்ந்த உஷாநத் சங்கீதா (வயது-44) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஏ9 வீதி ஊடாக மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் கொடிகாமம் பகுதியில் ரயில் கடவைக்கு அப்பால் உள்ள வர்த்தக நிலையத்திற்கு செல்லும் முகமாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு ரயில் பாதையை கடக்கும்போதே ரயில் மோதியதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30,33)

## இரு என்புக்...

பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் 42ஆவது நாள் அகழ்வு யாழ்.மாவட்ட மேலதிக நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வின்போது இரண்டு பெரிய என்புக்கூட்டுத் தொகுதிகளின் முழங்கால் பகுதிக்குக் குறுக்காக ஒப்பீட்டளவில் சிறிய எலும்புக்கூட்டுத் தொகுதியும் மற்றுமொரு என்புக் கூட்டின் மண்டையோடு ஒரு என்புக் கூட்டின் தோள்பட்டையுடன் தொடுகையுற்றவாறும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நான்கு என்புக்கூட்டு தொகுதிகளையும் சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அவை இன்று முற்றாக அகழ்ந்து எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறாக கடந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போதும், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மூன்று தடவைகள் ஒன்றன் மேல் ஒன்றாக என்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், நேற்றும் இவ்வாறு என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## யாழில் 7 வயது...

கேதீஸ்குமார் கார்த்திகேயன் (வயது-7) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான்.

குறித்த சிறுவன் கடந்த 31ஆம் திகதி பட்டம் விட்டு விளையாடிக் கொண்டிருந்தபோது திடீரென உடல் சுகவீனம் ஏற்பட்டது.

பின்னர் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் அங்கு மயக்க முற்றுள்ளார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று (03) மாலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவினால் மரணம் சம்பவித்துள்ள தாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (ம-7,60,104)

## 9 எலும்புக்...

காணப்பட்ட 7 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்ட 7 எலும்புக்கூட்டுத் தொகுதியுடன் இதுவரையில் 213 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இதுவரையில் 231 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## அரசியல்...

விழாவில் நேற்றுக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களின் பாதுகாப்பு நாட்டின் பாதுகாப்பு ஆகியவற்றை பாதுகாப்பது பொலிஸ் திணைக்களம் எதிர்கொண்டுள்ள சவாலாகும். இந்த நாட்டில் பொலிஸ் திணைக்களத்திற்கான கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்.

84 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பொலிஸ் துறையில் கடமையாற்றுகின்றனர். பொலிஸ் துறையில் உள்ள சில கும்பல்களின் மோசடி செயல்கள் காரணமாக முழுப் பொலிஸ் துறையின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பல கொலைகள் மற்றும் குற்றச் செயல்களை இதுவரையும் கண்டுபிடிக்கமுடியாமல் போனமைக்கு பொலிஸார் காரணமல்ல. பொலிஸார் மிகவும் தைரியமாக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். ஆனால் சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க முடியாமல் உள்ள கொலைகள் உள்ளிட்ட குற்றச்செயல்களுக்கு பின்னால் அரசியல் பின்புலங்கள் காணப்படுகின்றன அதுவே உண்மை" இவ்வாறு ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழில்...

இதில் பண்டத்தரிப்பு - சாந்தையைச் சேர்ந்த ஜெயந்தன்வினிஸ்ரலா என்ற தம்பதிகளின் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை கடந்த 28ஆம் திகதி பிறந்துள்ளது. பின்னர் குறித்த குழந்தை கடந்த 01ஆம் திகதி உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். சுவாசக் குழாயிலும், இருதயத்திலும் ஏற்பட்ட வியாதி காரணமாக குழந்தை உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-7,60,104)

## 906...

மன்னார் நறுவிலிக்குளம் கடற்கரையில் 906 கிலோ கிராம் கேரள கஞ்சா நேற்றுப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் விசேட பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் முருங்கன் பொலிஸார் மற்றும் கடற்படையினருடன் இணைந்து மன்னார்-நானாட்டான் பிரதான வீதி, நறுவிலிக்குளம் கடற்கரை பகுதியில் நேற்று திங்கட்கிழமை (3) காலை விசேட தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 25 மூட்டைகளில் பொதி செய்யப்பட்ட 398 சிறிய பொதிகளைக் கொண்ட கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா 906 கிலோ கிராம் எடை கொண்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாப் பொதிகளின் இலங்கை பெறுமதி பல கோடி எனத் தெரிய வருகிறது. (ம-7,285)

மஹஜன சம்பத
திகதி 2025.09.03
சீட்டிழுப்பு இலக்கம் 5941
T 1 8 2 3 2 8
அத சம்பத T 2 3 2 8
சீட்டிழுப்பு இலக்கம் 0516
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.09.03
சீட்டிழுப்பு இலக்கம் 0657
மகரம் 01 15 19 45

தன நிதானய
திகதி - 2025.09.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1971
A 20 60 61 62 A

மெகா பவர்
திகதி 03/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2289
R 12 02 10 75 76

ஜய
திகதி 2025.09.03
சீட்டிழுப்பு இலக்கம் 0209
O 5 4 7 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4183
சீட்டிழுப்பு திகதி 03.09.2025
J 23 32 48 61
J

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.03
சீட்டிழுப்பு இலக்கம் 1250
துலாம் 18 41 50 52 துலாம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
03.09.2025 வெற்றி வாரம் 0649
S 0 4 9 3 9 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,439,524.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2915
சீட்டிழுப்பு திகதி 2025.09.03 தினம் புதன்கிழமை
09 33 53 57 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,938,672.80

சனிதா
திகதி 03.09.2025 வெற்றி வாரம் 5076
33 37 70 79 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,144,719.20

ஜயோதா Jayoda
திகதி 2025.09.03 வெற்றி வாரம் 2158
15 34 41 44 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,443,832.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4627
சீட்டிழுப்பு திகதி 03.09.2025 தினம் புதன்கிழமை
07 21 34 61 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,466,938.80

கப்றுக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 07 08 14 38 48
2091
03.09.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.591,774,949.20

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2741
சீட்டிழுப்பு திகதி: 2025.09.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.88,864,748.80
01 04 16 34 I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் கருத்தரங்கு

**A/L - 2025**

வளவாளர்

**S. JEYAKUMAR**

B.A. (Hons) Econ spi, M.A in Econ (Pera) PGDE

- பரீட்சை எதிர்பார்ப்பு வினா - விடைகள்.
- புள்ளித்திட்ட விளக்கம்.
- தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்.
- கையேடுகள் வழங்கப்படும்.
- 40 மணித்தியாலங்கள் நடைபெறும்.

ஆரம்பம் : 09.09.2025
செவ்வாய் 02:00 P.m.
இடம் : NEW SCIENCE HALL JAFFNA.

(5322)

♦ வெளி மாணவர்களும் பங்குபற்ற முடியும்.
♦ நேரடியாகப் பங்குபற்ற முடியாத மாணவர்களுக்கு Zoom செயலிமூலம் நடைபெறும்.

077 723 8597, 076 535 0999
077 778 9815

## செம்மணிப்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

”வடக்கிலுள்ள புதைகுழிகளை மூடி மறைப்பதற்காகவே யாழ்ப்பாணத்துக்கு வந்து அபிவிருத்தி நடவடிக்கைகளை ஜனாதிபதி ஆரம்பித்து வைக்கின்றார் என சில தமிழ் அரசியல்வாதிகள் பாவித்தனமான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

செம்மணிப் புதைகுழியை தோண்டுவதற்கு நிதி ஒதுக்கியது யார்? ஸ்கான் இயந்திரம் கொண்டுவந்தது யார்? புதைகுழியை பாதுகாப்பதற்கு இரவு நேரங்களில் காவலாளிகளைப் போட்டிருப்பது யார்? இவற்றையெல்லாம் எமது அரசாங்கமே செய்கின்றது.

இது தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு மக்களுக்கு நீதி நிலைநாட்டப்படும். இது தொடர்பான உறுதிமொழியைக்கூட எமது ஜனாதிபதியே வழங்கியுள்ளார்.

இனிமேலும் தமிழ் மக்களுக்கு இப்படியான அரசியல்வாதிகளால் தண்ணி காட்ட முடியாது. தமிழ் மக்கள் அவர்களை நிராகரித்துவிட்டனர். இதனால்தான் கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் குப்பைகள் எல்லாம் கூட்டு சேர்ந்தன. துரோகிகள் என விமர்சிக்கப்பட்டவர்களுடன் கூட கூட்டு சேர்ந்தனர்.

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து எதிர்வரும் 23 ஆம் திகதி ஒரு வருடமாகின்றது. பொருளாதார சவால்கள் உள்ளன. அவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டால்தான் அபிவிருத்திகளை முன்னெடுக்ககூடியதாக இருக்கும்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி வருகின்றோம்.

எமக்கு எதிராக மக்கள் மத்தியில் கருத்துகள் விதைக்கப்படலாம். ஆனால் உண்மை என்னவென்பதை மக்கள் அறிந்து கொள்வார்கள்.

எங்களுக்கான ஆதரவை மென் மேலும் வெளிப்படுத்துவார்கள் என மேலும் தெரிவித்தார். (ம-7)

## கையூ...

நிதி பயன்படுத்தப்பட்டதாக முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## புல...

தாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. பெறுபேறுகளை https://doenets.lk/examresults என்ற இணையத்தளம் மூலம் பார்வையிடலாம். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3802)

076 825 7716 (ஆகாஸ்)


## மணப்பெண் தேவை

01. காரைநகர் - பருத்தித்துறை, இந்து, 1988, புனர்பூசம், Msc, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
02. காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், Computer Science, UK Citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (28386)
03. புங்குடுதீவு, இந்து, 1989, சுவாதி, Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (32178)
04. காரைநகர், இந்து, 1992, பூரட்டாதி, Civil Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (32827)
05. நெல்லியடி, இந்து, 1991, பூராடம், Graduate, USA Citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (47452)
06. கொக்குவில் - இணுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52796)
07. அளவெட்டி, இந்து, 1989, உத்திராடம், Msc in Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53552)
08. திருநெல்வேலி - சாவகச்சேரி, இந்து, 1992, கார்த்திகை, Bsc (Hons) in IT, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
09. கோண்டாவில், இந்து, 1990, அத்தம், Graduate, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (38579)
10. Jaffna Town, இந்து, 1991, கார்த்திகை, Masters of Accounting and finance, UK citizen மாப்பிள்ளைக்கு பெண்

எம்மிடம் எல்லா நாட்டிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (5324)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவை
அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும் (5323)

076 155 9905

## மணமகள் தேவை

யாழ். வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986, திருவோணம் 3ஆம் பாதம் (2ல் செவ்வாய்) கடையில் பணியாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு மணமகள் தேவை. சைவபோசன மணமகளும் ஏற்றுக்கொள்ளப்படும். (1511)

077 191 7936

## மொத்தக் கொள்வனவு

அங்கர், யோகட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (1516)

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
077 773 0900

## மாப்பிள்ளை தேவை

01. கோண்டாவில் - மாவிட்டபுரம், இந்து, 1994, அவிட்டம், Bachelor of Management மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
02. சாவகச்சேரி, இந்து, 1993, ரேவதி, LLB Degree மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
03. நெல்லியடி - வல்வெட்டித்துறை, இந்து, 1991, அத்தம், BEng (hons), MBA மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
04. காரைநகர், இந்து, 1996, சதயம், BSc, MSc, Software Engineer மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
05. நெல்லியடி, இந்து, 1995, மகம், BSc மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
06. வண்ணார்பண்ணை - அல்லைப்பிட்டி, இந்து, 1989, புனர்பூசம், Masters மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
07. கந்தர்மடம், இந்து, 1988, சுவாதி, BSc, MSc மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
08. துன்னாலை - பருத்தித்துறை, இந்து, 1987, பூரட்டாதி, Masters மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
09. சித்தங்கேணி - அளவெட்டி, இந்து, 1987, மகம், BSc மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
10. அராலி - சுழிபுரம், இந்து, 1994, ஆயிலியம், MBBS.Doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

எம்மிடம் எல்லா நாட்டிலும் Unmarried, Divorce மணப்பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு. (5324)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்டப் பதிவாளரில் மூத்தவரும் சங்கத்தலைவியும் சிரேஷ்ட உறுப்பினருமான
**திருமதி வரதலஷ்மி சோமசூரியசிங்கம்**
அவர்களின் அன்புக் கணவர்

அமரர் **பொன்னுத்துரை சோமசூரியசிங்கம்**

அவர்களது பிரிவை நினைந்து வருந்துவதோடு அன்னாரது பிரிவின் வலியால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைந்து இறைவனுடன் இரண்டறக் கலக்க பிரார்த்திக்கின்றோம். (C-3804)

**Dr.திருமதி ச.ஜெயலன் :**
சித்த ஆயுள்வேத வைத்தியர் – சுஜீவா வைத்தியசாலை
நாச்சிமார் கோவில் அருகாமை, யாழ்ப்பாணம்.

**Dr.ஜெ.ஜெயலன் :**
பிறப்பு இறப்பு மருத்துவப்பதிவாளர்
யாழ். [illegible]

## வேலை வாய்ப்பு
## டிரைவர் தேவை

நிறுவனம் : Sun Marketing (Pvt) Ltd - யாழ்ப்பாணம்

தகுதி

- செல்லுபடியாகும் AD வகை லைசன்ஸ்.
- குறைந்தது 2 வருட அனுபவம் இருந்தால் முன்னுரிமை.
- பொறுப்பு, நேர்த்தி, ஒழுக்கம், பாதுகாப்பான ஓட்டுநர் திறன் அவசியம்.
- சம்பளம் அனுபவத்தைப் பொறுத்து வழங்கப்படும்.

(1515)

Sun Marketing (Pvt) Ltd
Email : sunmarket012@gmail.com
076 139 1993


## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-3803)

V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
076 8226236

## கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3803)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS
076 822 6241
076 822 6237


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] அச்சகத்தில் 04.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org